Clr.No.19

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.329/2022 |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Prosecution PW 2 |
| Name | : | பரசுராமன் |
| Father's/Husband's Name | .. | நாராயணசாமி |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 46 |

Date : 30.10.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் சின்ன மாத்தூர் பகுதியில் வசித்து வருகிறேன். வாகனம் வைத்து டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். செல்ல பாண்டியன் என்பவர் என்னுடைய வாகன ஓட்டுனர். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு, அதிகாலை 04.00 மணி அளவில், எஸ்ஆர்எம், மணலி சந்திப்பு அருகே இருந்து என்னுடைய ஓட்டுனர் எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர் வாகனத்தை ஓரம் கட்டி இரண்டு நபர்கள் அவரை பணம் கேட்டு மிரட்டுவதாக என்னிடம் கூறினார். உடனடியாக

நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

2. சம்பவத்தை பற்றி என்னுடைய ஓட்டுனர் கூறித்தான் கேள்விப்பட்டேன் என்றும் சம்பவத்தை நேரடியாக நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Clr.No.19

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
------

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. CC.329/2022 |
| Sessions | : | |
| | | Prosecution |
| Deposition of witness for | : | PW 3 |
| Name | : | வெள்ளதுரை |
| Father’s/Husband's Name | .. | செந்தூர் பாண்டியன் |
| Village | | |
| Taluk | .. | |
| Caste | .. | |
| Calling | .. | |
| Religion | .. | |
| Age | .. | 40 |

Date : 30.10.2024

(Solemnly affirmed before this court under act X of 1969)

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் எர்ணாவூர் பகுதியில் வசித்து வருகிறேன். என்னுடைய சொந்த ஊர் சங்கரன் கோயிலாகும். டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் ஓட்டுநர் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 14.09.2022 அன்று அதிகாலை சுமார் 4, 5 மணி அளவில் எம் எஃப் எல் சந்திப்பு அருகே நான் ஓட்டி வந்த லாரியை ஓரம் கட்டி உறங்கிக் கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டது. நான் இறங்கி வந்து பார்த்தபொழுது, எனக்கு முன் நிறுத்தி வைத்திருந்த வாகனத்தின் ஓட்டுனர் இரண்டு நபர்கள் தன்னிடம் மிரட்டி பணம்

கேட்டதாகவும் அவர்கள் ஓடிவிட்டதாகவும் கூறினார். மேற்படி நபர்கள் இரண்டு சக்கர வாகனத்தில் நான் வருவதற்குள் சென்று விட்டார்கள். அந்த இரண்டு நபர்களை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். பரிசீலிக்கப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 14.09.2022 அன்று அதிகாலை சுமார் 4 மணியளவில், மாதவரம் பொன்னேரி நெடுஞ்சாலை, ஐ ஓ டி எல் என்ற என்று நிறுவனம் எதிரே லாரி நிறுத்திவிட்டு நான் உறங்கிக் கொண்டிருந்தேன் என்றும் அப்போது TN 03 AL 4198 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த எதிரிகள் இருவரும் செல்லப்பாண்டி என்பவரை லாரியில் உறங்கிக் கொண்டிருந்தவரை ஷட்டரை திறந்து அவரை மிரட்டி பணத்தைப் பறிக்க முயற்சி செய்தார்கள் என்றும் அதனை நான் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையின் போது கூறினேன் என்றால் சரியல்ல.